# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம்** 13-06-2024 **வியாழக்கிழமை காலை** 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் பழைய M.C.C. செயல்பட்டு வந்த இடத்தில் அரசு டிஜிட்டல் நூலகம் அமைக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.858 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) மார்த்தாண்டம் காந்தி மைதானம் ரவுண்டானா சுற்றிலும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதால் விளம்பர போர்டுகள் வைப்பதை தடை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.858 (2) தீர்மானிக்கப்பட்டது.

### 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) குழித்துறை நகராட்சி 9-வது வார்டில் விளவங்கோடு சாலையிலிருந்து மேலே சாணிவிளை செல்லும் சாலை குடிநீர் திட்ட பணிகளின்போது தோண்டப்பட்டுள்ளதால் சாலை மிகவும் பழுதுபட்டுள்ளது. ஆகையால் சாலையை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.859 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) நகராட்சி சாலைகளுக்குள் பெரிய டாரஸ் லாரிகள் (16 சக்கரம், 14 சக்கரம், 12 சக்கரம்) செல்ல தடை விதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.859 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) குழித்துறை பாலவிளை சாலையில் திரு. ராஜேஷ் அவர்களுடைய வீட்டின் எதிர்புறம் ஒரு மின்கம்பம் நட்டு அதில் ஒரு தெருவிளக்கும் செக்காலத்தெரு சாலையில் திரு. கலைச்செல்வன் வீட்டின் அருகாமையில் ஒரு மின்கம்பம் நட்டு அதில் ஒரு தெருவிளக்கும் குளவிளை சாலையில் திரு. தேவஸ்ராஜ் அவர்கள் கடை எதிர்புறம் ஒரு மின்கம்பம் நட்டு அதில் ஒரு தெருவிளக்கும், விளவங்கோடு சாலையியல திரு. குமார் வீட்டு அருகாமை ஒரு மின்கம்பம் நட்டு அதில் ஒரு தெருவிளக்கும் போட மன்றம் தீர்மானிக்கலாம்.
மன்றத்தீர்மான எண்.859 (3) தீர்மானிக்கப்பட்டது.

17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A.அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) வடக்கு தெரு முபாரக் ஹோட்டல் பக்கம் இருந்து நேசமணி பாலம் வரை மழைநீர் வடிகால் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.860 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) வடக்கு தெரு காட்டுவிளை ஹரிதாஸ் வீட்டின் அருகில் இருந்து முத்தாரம்மன் வீடு வரை காங்கீரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.860 (2) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண் 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட VLC திருமண மண்டபத்தில் வைத்து மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் 02-12-2023 மற்றும் 03-12-2023 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்ற விபரம் குறித்து தினசரி செய்தி நாளிதழான மாலை தமிழகம் மற்றும் Evening Tamilnadu-வில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.33,600/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2316/2023/அ1

மன்றத்தீர்மான எண்.861 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN.74Z.4605க்கு 2024-ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று பெறுவதற்கு, வாகனத்தின் பழுதுகள் சரிசெய்யப்பட்டு வர்ணம் பூசி, ஸ்டிக்கர் பணிகள், எலக்ட்ரிக்கல் பணிகள், வட்டாரப்போக்குவரத்து கட்டணம், பசுமை வரி ஆகியவற்றிற்கான செலவு தொகை ரூ.24,211/- இந்நகராட்சி ஓட்டுநர் திரு.த.சுந்தர்சிங் அவர்களால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு பொதுநிதியின் கீழ் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1055/2013/இ1

மன்றத்தீர்மான எண்.862 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 3</u>

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 13-04-2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 80-ல் நகர்மன்றங்கள் கல்வி வரி விதிக்க பிரிவு 91-ல் கண்டவாறு சொத்துவரி ஆண்டு மதிப்பில் ஐந்து சதவீகிதத்திற்கு மிகாமல் வரிவிதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் மீது சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானம் நிறைவேற்றி அரசினருக்கு அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.326581/2023/ஆர், நாள் 27-12-2023-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட விதிகளின்படி சொத்துவரி ஆண்டு மதிப்பில் ஆண்டிற்கு 5% கல்வி வரி விதிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.706/2024/இ1

மன்றத்தீர்மான எண்.863 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 4</u>

குழித்துறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டமைக்கு ஜனவரி 2019 முதல் மே 2023 வரையான காலங்களில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி உத்தரவு பெறப்பட்டு பணியானது முடிக்கப்பட்டது. தற்போது ஒப்பந்ததாரர் (Southern solid waste Management service) என்ற நிறுவனத்திற்கு முன் வைப்பு தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட EMD தொகை ரூ.4,35,000/-யினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.383/2024/H1

மன்றத்தீர்மான எண்.864 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 5</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சுற்றி திரியும் நாய்களை கருத்தடை செய்வதற்கு இந்நகர்மன்றத்தின் தீர்மான எண்.523 நாள் 30-05-2023-ன் படி ரூ.3,00,000/-த்திற்கு செலவினம் செய்ய அனுமதி பெறப்பட்டது. இதில் ஏற்கனவே ஜீவ காருண்யா விலங்குகள் நல அறக்கட்டளையில் இருந்து 167 நாய்களுக்கு ஒரு நாய்க்கு

1650/- வீதம் ரூ.2,75,550/- செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதில் மீத தொகை ரூ.24,450/- மட்டும் உள்ளது. மேலும் 20-02-2024 அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஜீவ காருண்யா விலங்குகள் நல அறக்கட்டளையில் இருந்து தற்போது கூடுதலாக 91 நாய்கள் பிடித்து கருத்தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு நாய்க்கு 1650/- வீதம் ரூ.1,50,150/- கூடுதல் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3459/2022/H1.

மன்றத்தீர்மான எண்.865 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 6

பொதுசுகாதாரம் இந்நகராட்சி ஆர்.சி.சி-யில் பிளாஸ்டிக் பேக்கிங் செய்வதற்கு ரோப் வாங்கிய செலவு தொகை ரூ.12000/- திரு. மரியதாஸ் துப்புரவு பணி மேற்பார்வையார் அவர்களால் வழங்கப்பட்டது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- அத்தியாவசிய பணிகளுக்கு செலவு மேற்கொண்டுள்ளதால் செலவின தொகை வழங்கலாம்.
ந.க.எண்.3256/2022/H1.

மன்றத்தீர்மான எண்.866 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் உள்ள குழிவிளை ஒன்றாம் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான பொதுகிணறு தூர்வாரி சுத்தம் செய்திட ரூ.40,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.854, நாள் 20-02-2024 அன்று அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 12.90% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியானது தனிநபர் ஒப்பந்தப்புள்ளி ஆதலால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.343/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.867 மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சியில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் சமையலறையில் குடிநீர் வசதி மற்றும் காய்கறிகள் கெட்டு போகாமல் இருக்க குளிர் சாதனப்பெட்டி ஆகியவை அமைக்க ரூ.3.80 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.826, நாள் 20-02-2024 அன்று மன்ற அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.K.G.கிருஷ்ணதாஸ் | 15.16% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P.ஜெயபிரகாஷ் | 39.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு.P.ஜெயசந்திரன் | 27.61% மதிப்பீட்டை விட குறைவு |
| 4 | திருமதி.P.சரோஜா | 15.76% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்**.306/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.868 மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் உள்ள குறுக்காவிளை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பொதுகிணறு தூர்வாரி சுத்தம் செய்திட ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.852, நாள் 20-02-2024 அன்று அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 25.75% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியானது தனிநபர் ஒப்பந்தப்புள்ளி ஆதலால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.344/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.869 மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் உள்ள மேட்டுக்கிராமம் பகுதியில் பொதுக்கிணறு தூர்வாரி சுத்தம் செய்வதற்கு ரூ.67,000/-க்கு மதிப்பீடு தயார் செய்து நகர்மன்ற தீர்மானம் எண்.853, நாள் 20-02-2024 அன்று அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 14.61% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி தனிநபர் ஒப்பந்தப்புள்ளி ஆதலால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3165/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.870 மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் காட்டுவிளை முதல் கல்லுக்கெட்டி சந்திப்பு வரை உள்ள சாலையில் மழைநீர் வடிகால் சீரமைக்க ரூ.90,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.855, நாள் 20-02-2024 அன்று அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.346/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.871 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் பேருந்து நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றில் புதியதாக மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம்

எண்.856, நாள் 20-02-2024-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு 06-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயசிங் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திருமதி.P. சரோஜா | 8.55% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் அவர்கள் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.347/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.872 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 13</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20-ல் R.C.சர்ச் பின்புறத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றுக்குள் உள்ள நீர் இறைக்கும் Compressor பழுது ஏற்பட்டு மற்றும் அவ்விடத்தில் உள்ள Sintex tank உடைப்பு ஏற்பட்டு பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதினை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.42,000/- ஆகும். மேற்கண்ட பணி குடிநீர் பணியாதலால் பணியின் அவசர அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் மூலம் பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2481/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.873 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தெரு விளக்குகளை புதியதாக LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மின்கம்பங்களில் வார்டு எண் மற்றும் pole எண் paint மூலம் எழுதுவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி மூன்று எண்ணம் பெறப்பட்டு அதன்படி மதிப்பீடு ரூ.75,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டு விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர் திருமதி.P. சரோஜா அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.306/2024/E1

மன்றத்தீர்மான எண்.874 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 15</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11-ல் வெட்டுவெந்நி சப்பாத்து சாலையில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் சாலையில் வழிந்தோடுகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட சேதமடைந்த மழைநீர் வடிகாலை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.8.80 இலட்சம் (எட்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1017/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.875 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 16</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20-ல் மார்த்தாண்டம் பகுதியில் பழைய உரக்கிடங்கின் முன்னால் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மேலும் உரக்கிடங்கின் முன்னால் உள்ள மதில் சுவர் மழை காரணத்தினால் சேதமடைந்துள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் மதில் சுவர் மற்றும் சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.40 இலட்சம் (ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1015/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.876 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 17</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.21-ல் குலசேகரம் சாலையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்ல முடியாமல் அடைப்பு ஏற்பட்டும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே

மேற்கண்ட இடத்தில் சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் (நான்கு இலட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1016/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.877 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN74Z4605 எண் கொண்ட குடிநீர் வாகனத்தின் அனுமதி சான்று முடிகின்ற காரணத்தால் 2024-2029 ஆண்டுகளுக்கு புதுப்பித்தல் செய்ய வேண்டியிருப்பதால்

| | |
|---|---|
| புதுப்பித்தல் கட்டணம் | - 675/- |
| சேவை கட்டணம் | - 100/- |
| சாலைவரி கூடுதல் கட்டணம் | - 179/- |
| புகைசான்று கட்டணம் | - 300/- |
| மொத்தம் | 1254/- |

மேற்படி தொகை ரூ.1254/- இந்நகராட்சி ஒட்டுநர் த. சுந்தர்சிங் அவர்களால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1055/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.878 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் எண் ந.க.எண்.26978/2023/ஏ1, நாள்:28-08-2023-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களிடம் 01-09-2023 அன்று தொழில்நுட்ப அனுமதி பெற்று இந்நகர்மன்ற தீர்மான எண் 654, நாள்:18-10-2023-ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 01-09-2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டின் கீழ் இனங்கள் (item of work) மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1) Plastering in cm 1:5 = 110 $m^2$
2) Painting 2 coats with ready mixed plastic Emulsion paints for walls = 10655 $m^2$
3) Painting 2 coats with ready mixed Enamel paint in doors = 610 $m^2$
4) Weathering course with concrete broken bricks = 120 $m^3$
5) Finishing the top of roof with machine pressed tiles = 2060 $m^2$
6) Light fittings = 15 Nos.
7) M.S. Grills = 50 kg

தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கட்டிடத்தின் உறுதி தன்மைகேற்ப item no.4 - Weathering course with concrete broken bricks பதிலாக plain cement concrete 1:1.5:3 5cm thick அமைக்க வேண்டியுள்ளது. எனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள்

Weathering course = 120.00 $m^3$ x 3638.80 = 4,36,666.00

Plain cement concrete = 79.00 $m^3$ x 5378.30 = 4,24,885.70

மேற்படி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

.

அ.கு:-மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.912/2023/இ1

மன்றத்தீர்மான எண்.879 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சியில் உள்ள குழித்துறை நீதிமன்றம் பகுதியில் உள்ள கிணறு முழுவதுமாக வண்டல்மண் நிரம்பி உள்ளதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கிணற்றில் உள்ள நீரை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கூறிய பகுதியில் உள்ள கிணற்றினை தூர்வாரி மூடி அமைத்து மோட்டார் அமைப்பதற்கு ரூ.1.30 (ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கு.

அ.கு:-மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.1014/2024/இ1

மன்றத்தீர்மான எண்.880 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.21</u>

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதியதாக காய்கறி சந்தை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால் அங்கு செயல்பட்டு வந்த காய்கறி கடைகளை லாறிப்பேட்டையில் மாற்றம் செய்திட மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்சமயம் லாறிப்பேட்டையில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் 41 கடைகளை நகராட்சியில் நிலுவையின்றி

வாடகை செலுத்தி ரசீது சமர்ப்பிக்கும் கடைதாரர்களுக்கு மட்டும் தனித்தனியாக ஏலமிட்டு ஒப்படைப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்.**3066/2023/அ2.

மன்றத்தீர்மான எண்.881 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் நவீன மீன்சந்தையில் செயல்பட்டுவரும் மீன் கடைகளில் கட்டண்ம் வசூல் செய்யும் உரிமம் தற்சமயம் துறைரீதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே அங்கு செயல்படும் 28 கடைகளையும் மொத்தமாக பொதுஏலம் மூலம் குத்தகைக்கு விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்.**3066/2023/அ2.

மன்றத்தீர்மான எண்.882 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.23

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி நிரந்தரமாக நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் நடைபெறவுள்ள 99-வது வாவுபலி பொருட்காட்சி 18-07-2024 முதல் 06-08-2024 வரை நடத்தவும். அதன் அடிப்படையில் தற்போது நடைபெறவுள்ள 99-வது வாவுபலி பொருட்காட்சியில் வரிசை எண்.1 முதல் 12 வரையுள்ள இனங்களையும் ஒரே இனமாக சேர்த்து பொது ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | வாவுபலி பொருட்காட்சி திடலில் நுழைவு கட்டணம் வசூல் செய்தல் |
| 2 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக்காட்சி அமைத்து நடத்தும் உரிமம் |
| 3 | பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒலிபெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் உரிமம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து குளிர்பானம் விற்பனை செய்யும் உரிமம் |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து உணவு விடுதி நடத்தும் உரிமம் |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து அப்பளம் பஜ்ஜி |

| | |
|---|---|
| | கடை நடத்தும் உரிமம் |
| 8 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கன் விற்பனை செய்யும் உரிமம் |
| 9 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பானிபூரி அமைத்து விற்பனை செய்யும் உரிமம் |
| 10 | தபால் நிலையம் முன்புள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைத்து நடத்தும் உரிமம் |
| 11 | **99–வது வாவுபலி பொருட்காட்சியில் அமைக்கப்படும் ஸ்டால்களில் உரிமங்களுக்குட்பட்ட பொருட்டுகளை விற்பனை செய்ய கடை வாடகை** |
| 11(அ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன் பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1-ன் அளவு 7x5 |
| 11ஆ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1-ன் அளவு 7x6 |
| 11(இ) | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால் 1 முதல் 20 வரை கடை 1-ன் அளவு 8x6 |
| 11(ஈ) | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கடைகள் 1 முதல் 30 வரை கடை 1-ன் அளவு 10x9 |
| 12 | விளம்பர ஸ்டால் 1 அளவு 9x8 |

அ.கு.- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்.1-ல் கண்ட நுழைவு வாயில் கட்டணம் வசூல் சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கு தற்போதைய சூழலின் பேரில் நிர்ணயம் செய்யலாம்.

3) மின்கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் குத்தகைதாரரையே சாரும்.

4) மேற்படி வாவுபலி பொருட்காட்சி நடத்திட நகராட்சியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.927/2024/அ2

மன்றத்தீர்மான எண்.883 - 99-வது வாவுபலி பொருட்காட்சி நுழைவு கட்டணம் நகராட்சி மூலம் வசூல் செய்வது எனவும் மீதம் உள்ள அனைத்து இனங்களும் ஒட்டு மொத்தமாக ஏலம் விடவும் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.24

99-வது வாவுபலி பொருட்காட்சி தொடர்பான ஏல நிபந்தனைகள்

| வ.எண் | குத்தகை உரிமம் |
|---|---|
| 1 | வாவுபலி பொருட்காட்சி திடலில் நுழைவு கட்டணம் வசூல் செய்தல் |
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமம் |

| | |
|---|---|
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் |
| 3 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் மட்டும் விற்பனை செய்யும் உரிமம் |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் உணவு விடுதி நடத்தும் உரிமம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பானிபூரி விற்பனை செய்யும் உரிமம் |
| 8 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன்பக்கம் உள்ள 11 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7'x 5' |
| 9 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் 9 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7' x 6' |
| 10 | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள 20 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 8'x 6' |
| 11 | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 10'x 9' |
| 12 | நகராட்சி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடங்களில் மட்டுமே கடைகள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

மேற்கண்ட அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவசையை முன்னிட்டு நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியை நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசு ஆணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி இப்பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்துவதற்கு நிரந்தர அனுமதி குழித்துறை நகராட்சிக்கு வழங்கப்பட்டதின்படி 99-வது வாவுபலி பொருட்காட்சி 18-07-2024 முதல் 06-08-2024 முடிய 20 தினங்கள் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகள் பேரில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.5000/- செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.
2) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் கடவு சீட்டு அளவிலான புகைப்படம் மற்றும் ஆதார் அடையாள அட்டை பான்கார்டு, கைபேசி, தொலைபேசி எண் மற்றும் GST எண் இணைத்திட வேண்டும்.
3) விண்ணபத்தில் விண்ணப்பம் பெற்ற நபரின் புகைப்படம் இணைத்து ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரில் நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையிருப்பின் வரியினை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். வரி நிலுவை இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. வரி மற்றும் வரியில்லா இனங்கள் மீது நிலுவை இல்லை என தடையில்லா சான்று இணைக்க வேண்டும்.
4) ஏலத்தை முடிவு செய்து மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழங்கப்படும். உத்தரவுப் பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் குத்தகை

தொகை வரிகள் உட்பட முழுவதும் நகராட்சி கஜனாவில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகை பறிமுதல் செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும்.

5) ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணத்தால் ஒத்திவைக்கவோ அல்லது வேறு ஒருதேதிக்கு மாற்றி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது.

6) ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உரிமம் பெற்றவர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.

7) நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமம் பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

8) இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளப்பெருக்கம்/ தீயினால் ஏற்படும் இழப்பு, அரசால் பிறப்பிக்கப்படும் அவசர கால கட்டுபாடுகளுக்கும், ஏற்படும் இழப்புகளுக்கு உரிமம் பெற்றவரே பொறுப்பாவர், இதில் நகராட்சியால் எந்தவித இழப்பும் வழங்கப்பட மாட்டாது.

9) நகராட்சி அனுமதியுடன் பொருட்காட்சி நடத்த அனுமதி பெற்றவர் தங்கள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தை மின்சார வாரியத்திற்கும் தீ தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தை தீயணைப்பு துறைக்கும் செலுத்தி உரிய ரசீது பெற்று அதன் விவரம் நகராட்சியில் தெரிவிக்கப்பட வேண்டும்.

10) ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீங்குவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனங்களையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட கூடாது.

11) நகராட்சியால் வழங்கப்படும் வரைபடத்தின் அடிப்படையில் பக்கக்காட்சி மற்றும் கடைகள் அமைக்கப்பட வேண்டும்.

12) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.

13) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருட்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழங்க வேண்டும்.

14) பக்கக்காட்சி எடுக்கும் உரிமைதாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் வரைபடத்தின்படி கபடி நடத்த 50’x50’ இடம் விட்டுதான் அனைத்து பக்கக்காட்சி இனங்களும் அமைக்கப்பட வேண்டும்.

15) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக்கூடாது. கபடிப்போட்டிக்கான இடத்தில் பக்கக்காட்சி அமைக்ககூடாது.

16) குத்தகை இனங்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் செலுத்திட நேரும் பட்சத்தில் உரிமதாரர் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.
17) பறவைகள் அல்லது மிருகங்கள் மற்றும் சூதாட்டம், ரிக்கார்டு டான்ஸ் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் நடத்த அனுமதிக்க கூடாது.
18) கட்சி சின்னங்களோ கொடிகளோ மத சம்மந்தமானவை குறித்த பிரச்சாரங்களோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.
19) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகு போக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.
20) பக்கக்காட்சி அமைப்பவர் தீ தடுப்பு துறைச்சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். உறுதி சான்று பெற்ற விவரம் நகராட்சிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
21) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனங்களை தவிர வேறு வியாபாரம் செய்யக்கூடாது.
22) பொருட்காட்சி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.
23) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.
24) பொருட்காட்சி துவக்கவிழா மற்றும் நிறைவுவிழா, பொருட்காட்சி திடலில் கபடி போட்டி நடத்துதல், பரிசு பொருட்கள் வழங்கல் புகைப்படம் எடுத்தல் போன்றவை நகராட்சியை சார்ந்தது.
25) பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள வி.எல்.சி. மண்டபத்தில் நடத்தப்படும் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு நகராட்சியிடம் இருந்து நேரடியாக அனுமதி பெற வேண்டும்.
26) பொருட்காட்சி திடலில் தேவையான இடங்களில் சென்டிறிங் அடித்தல், மணல் நிரப்புதல், ஒலி, ஒளி அமைத்தல், கண்காணிப்புகேமரா பொருத்துதல் மற்றும் நுழைவு வாயில் அலங்காரம், 4 இடங்களில் ஆர்ச் (குழித்துறை சந்திப்பு, வெட்டுவெந்நி, திருத்துவபுரம், பம்மம்) தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் குழல்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளை வாவுபலி பக்கக்காட்சி உரிமதாரரே தங்கள் சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.
27) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடை 11-ம், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20-ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் 9-ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ்பகுதியில் உள்ள நிரந்தரமான 12 அரசு ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான அரசு ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும் அதை ஒட்டி பாப்கான் சட்டமன்ற அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் நகராட்சி அரங்கம் மற்றும் இலாகாக்களின் அரங்கமும்

அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து கூல்டிரிங்ஸ் கடை மற்றும் காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும், அதனை ஒட்டி அப்பளபஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக்காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் அந்தந்த இடங்களில் அமைத்து கொள்ள வேண்டும்.

28) குத்தகை இனம் வரிசை எண்.3 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டும். தேவையற்ற, அருவருக்கதக்க விளம்பரங்கள் செய்திட அனுமதி இல்லை. வாவுபலி பொருட்காட்சியில் குத்தகைதாரருக்கு நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் குறிப்பிடப்பட்ட கடைகளில் மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும்.

29) பொருட்காட்சி திடலிலிருந்து வெளியே செல்லும் போது வலதுபுறம் தீயணைப்பு துறை செயல்படும்.

30) மேற்கண்ட குத்தகை இனங்களில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையினை 100% முழுமையாக ரொக்கமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்கும் பட்சத்தில் தங்களின் மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

31) நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் பாக்கி வைத்து இருப்பவர்கள் வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

32) 99-வது வாவுபலி பொருட்காட்சியில் பக்கக்காட்சி எடுக்கும் நபர் நகராட்சி அலுவலர்கள் நகராட்சி ஊழியர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பக்கக்காட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்து இனங்களையும் அவர்கள் விரும்பும் தேதியில் ஒருகுடும்பத்திற்கு (5 நபர்கள்) கட்டாயம் பார்வையிட அனுமதிக்க வேண்டும். பொருட்காட்சி துவங்கும் நாளில் அதற்கான அனுமதி வழங்க வேண்டும்.

33) வாவுபலி பொருட்காட்சி திடலில் சேகரமாகும் குப்பைகளை குத்தகைதாரர் சொந்த செலவில் அப்புறப்படுத்திட வேண்டும். மேலும் கைவினை பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் கண்காணிக்க நபர் நியமிக்கவும், பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவுபெறும் நாள் வரையுள்ள மின்கட்டணம் குத்தகைதாரரை சார்ந்தாகும். மேலும் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவு பெறும் நாள் வரையில் தேவையான பணியாளர்களை (பாதுகாவலர்கள்) நியமித்து ஊதியம் வழங்க வேண்டிய பொறுப்பு உரிமதாரரையே சாரும்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.927/2024/அ2

மன்றத்தீர்மான எண்.884 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.25</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு தலைமை நீரேற்று நிலைய சுத்திப்பு நிலையத்திலுள்ள 7 எண்ணம் மின் மோட்டார்கள், சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள 15 HP Submercible Motor, இடைக்குளம் நீரேற்று நிலையத்தில் 15 HP Submercible Motor, 21 வார்டுகளிலும் குடிநீர் பயன்பாட்டிற்கு இல்லாத இதர உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள 1.00HP, 1½HP, 2HP Compressor Motor-கள் 1HP, 1.5HP, Jet Motor ஆகியவற்றில் பழுது ஏற்படும் காலங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகராட்சியில் போதிய மின் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் தடையின்றி வழங்குவதற்கு மேற்கண்ட மோட்டார்கள் பராமரிப்பு செய்வதற்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1042/2024/இ1

மன்றத்தீர்மான எண்.885 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.26</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுமணி மீன் மார்க்கெட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் மிகவும் சிரமாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அவ்விடத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1041/2024/இ1

மன்றத்தீர்மான எண்.886 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.27</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் குலசேகரம் சாலை சந்திப்பில் நகராட்சிக்கு சொந்தமான பொது கிணறு ஒன்று உள்ளது. அதில் புதியதாக மின்மோட்டார் மற்றும் Sintex Tank பொருத்தி பொதுமக்களுக்கு குடிநீர்

வினியோகம் செய்வதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.20 இலட்சம் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1040/2024/இ1

மன்றத்தீர்மான எண்.887 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.28</u>

குழித்துறை நகராட்சி உபயோகத்தில் உள்ள 6 KVA UPS. with Battery பொது பிரிவில் பயன்பாட்டில் உள்ள 6 KVA UPS with Battery வருடாந்திர பராமரிப்பு பணி தற்போது முடிந்து விட்டதால் மீண்டும் 2024-2025-ம் ஆண்டிற்கான UPS-ன் வருடாந்திர பராமரிப்பு பணிக்காக ரூ.70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1038/2024/இ1

மன்றத்தீர்மான எண்.888 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.29</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தாமிரபரணி ஆற்றின் கரையோரத்தில் வி.எல்.சி. ஆடிட்டோரியம் என்ற பெயரில் நகராட்சிக்கு சொந்தமான திருமண மண்டபம் அமைந்துள்ளது. விஜயலட்சுமி முந்திரி பருப்பு தொழிற்சாலை உரிமையாளர் திரு. ரவீந்திரன் நாயர் அவர்களின் சொந்த செலவில் கட்டப்பட்டு (1975-ல் அடிக்கல் நாட்டப்பட்டு) 1978-ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். திருமண மண்டபம் மண்டபம் அமைந்துள்ள இடம் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமானதாகும். கட்டிடம் தற்பொழுது உள்ள திருமண மண்டபம் GI Sheet கூரையினால் ஆனது கட்டிடத்தின் பரப்பளவு சுமார் 1200 ச.மீ. ஆகும். தற்பொழுது தரைதளத்தில் சமையல் அறை டைனிங் Hall மற்றும் Marriage Hall இயங்கி கொண்டு வருகிறது. இம்மண்டபம் குழித்துறை நகராட்சி மற்றும் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு திருமணம் மற்றும் இதர வாடகைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது போதிய வசதி இல்லாத காரணத்தினாலும் மற்றும் பழுதடைந்த பழைய கட்டிடமானதால் பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக நவீன முறையில் திருமண மண்டபம் அமைக்க நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். அதன் அடிப்படையில் நவீன முறையில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசு திட்டநிதி பெறவும் மற்றும் நிர்வாக அனுமதி பெறவும் தனியார் மூலம் திட்ட பிரேரணை தயாரித்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட திட்டத்திற்கு திட்ட பிரேரணை

தயாரிக்க கீழ்கண்டவாறு மூன்று தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | Glency Docmra consultants India Pvt. Limited, Madipakkam, Chennai-91 | 1.20% மதிப்பீட்டு தொகையில் + GST 18% |
| 2 | Maxcon Town Planning and Development Pvt. Limited, Teynampet, Chennai-18 | 2.5% மதிப்பீட்டு தொகையில் + GST 18% |
| 3 | ECLAT Designs & Infrastructure Pvt. Limited, Porur, Chennai-16 | 1.5% மதிப்பீட்டு தொகையில் + GST 18% |

மேற்கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளியாக அவர்கள் கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1039/2024/இ1

மன்றத்தீர்மான எண்.889 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.30

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் மார்த்தாண்டம் குலசேகரம் சாலை சந்திப்பில் தேசிய நெடுஞ்சாலையில் வடிந்து ஓடும் மழைநீர் அதன் எதிர்புறம் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்து பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாகவும் இடையூறாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி மழைநீர் வடிகால் அமைப்பது அவசியமானதால் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,70,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது-

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1101/2024/இ1

மன்றத்தீர்மான எண்.890 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.31

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் எழுது பொருட்கள் Toner மற்றும் பதிவேடுகள் போன்ற பொருட்கள் கொள்முதல் செய்யவும், மேற்படி பொருட்கள் கூட்டுறவு அச்சகம் மூலம் கொள்முதல் செய்யவும், 2024-2025-ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.15,00,000/-

(Fifteen lakhs only) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**180/2007/டி2

மன்றத்தீர்மான எண்.891 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.32

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்வதற்கும், கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்கும் உத்தேச செலவின தொகை ரூ.1,50,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பாதுகாப்பு உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாஸ்க் | 180 |
| 2 | கிளவுஸ் சிறியது | 150 set |
| 3 | கம்பூட்ஸ் | 60 set |
| 4 | Reflector Jackets | 60 set |
| 5 | கிளவுஸ் (பெரியது) | 100 set |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3055/2022/H1

மன்றத்தீர்மான எண்.892 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.33

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை பணியாளர்களுக்கு தேவையான கிருமிநாசினி பணிகள் மேற்கொள்ளவும் கீழ்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்யவும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், உத்தேச செலவின தொகை ரூ.5,50,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மருந்து மற்றும் கிருமி நாசினி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Abate | 100 Litre |
| 2 | Pyruthrum | 100 Litre |
| 3 | Dacillus Thurigenis | 50 kg |
| 4 | Flycontrol Liஷde | 50 Litre |
| 5 | Flycontrol Groruls | 50 kg |
| 6 | Lemon grass Oil | 50 Litre |

| | | |
|---|---|---|
| 7 | Black Phenyl | 200 Litre |
| 8 | Sented Phonyl | 300 Litre |
| 9 | Toilet Cleaning Arid | 100 Litre |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**3055/2022/H1

மன்றத்தீர்மான எண்.893 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.34

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் கீழ்க்காணும் விபரப்படி கொள்முதல் செய்யவும், கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யவும், உத்தேச செலவின தொகை ரூ.3,50,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | தளவாட பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இரும்பு மண்வெட்டி | 30 |
| 2 | மரகைப்பிடி மண்வெட்டி | 60 |
| 3 | பிக்காஸ் | 25 |
| 4 | 10 அடி நீள இரும்பு மண்வெட்டி | 30 |
| 5 | இரும்பு கை அகப்பை (சிறியது) | 50 |
| 6 | கடப்பாறை | 10 |
| 7 | முள்வெட்டும் அருவாள் | 25 |
| 8 | கைமாறு | 50 |
| 9 | தெரு கூட்டும் மாறு | 150 |
| 10 | மூங்கில் குட்டை | 100 |
| 11 | பூங்கா புல்வெட்டும் கத்திரி | 10 |
| 12 | இரும்பு அகப்பை பெரியது | 30 |
| 13 | ரப்பர் குட்டை | 60 |
| 14 | முள் மண்வெட்டி | 50 |
| 15 | நான்கு விரல்போர்க் | 30 |
| 16 | பிளாஸ்டிக் பைக்கட் | 25 |
| 17 | பிளாஸ்டிக் மக் | 25 |
| 18 | Dust bin (பெரியது) | 25 |
| 19 | Brush (Toilet & Fish Market) | 100 |
| 20 | Barrel (பெரியது) | 20 |
| 21 | ஒட்டடை கம்பு பெரியது | 5 |
| 22 | மாப்பு | 25 |
| 23 | வைப்பர் | 30 |

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3055/2022/H1

மன்றத்தீர்மான எண்.894 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.35</u>

குழித்துறை நகராட்சி கருங்கல் சாலையில் உள்ள தினசரி சந்தை அமைத்து புதியதாக நவீன தினசரி வணிகவளாகம் அமைத்தல் பணி நடைபெற்று வருவதால் அருகாமையில் உள்ள காலியிடத்தில் தற்காலிக தினசரி சந்தை அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டிட தற்காலிக தினசரி சந்தையில் மின்சார வசதி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.8,20,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1099/2024/**இ**1

மன்றத்தீர்மான எண்.895 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.36</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.8-ல் மேட்டுகிராமம் இசக்கியம்மன் கோயில் அருகில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட மழைநீர் வடிகால் பழுதுபார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணியினை பொதுநிதியின் கீழ் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1100/2024/**இ**1

மன்றத்தீர்மான எண்.896 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.37</u>

குழித்துறை நகராட்சி நமக்கு நாமே திட்டம் (NNT) 2023-2024**ன்கீழ்** மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் CCTV கேமரா பொருத்தும் பணி மேற்காள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.80 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் கடித ந.க.எண்.567/2023/ஆ1,

நாள் 07-03-2024-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 26-03-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 9.43% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் வரிசை எண்.1-ல் கண்ட ஒப்பந்ததாரர் கொடுத்துள்ளார். மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1526/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.897 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.38</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.540, நாள் 30-06-2023-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு "No Food Waste" கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது 07-06-2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு ஒராண்டு காலம் முடிவு பெறுவதால், ஏல ஆவணங்களில் (Bid document) குறிப்பிட்டுள்ளபடி ஒரு வருட காலத்தில் மேற்படி நிறுவனம் சிறப்பாக பணியினை செயல்படுத்தியமையால் மேலும் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திற்கே பணி நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1967/2023/இ1

மன்றத்தீர்மான எண்.898 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.39</u>

குழித்துறை நகராட்சியில் உள்ள சுகாதார பிரிவு கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 60 வருடத்திற்கு மேல் ஆகியுள்ளதால் மிகவும் சிதலமைந்துள்ளதாலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக சுகாதார பிரிவு அலுவலக கட்டிடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25.00 (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.1098/2024/இ1

மன்றத்தீர்மான எண்.899 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.40</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனிசாமி வணிகவளாகத்தின் தென்மேற்கு பகுதி தேங்காய்பட்டணம் சாலையை ஒட்டி 12 x10 இடம் காலியாக உள்ளது. மேற்படி காலியிடத்தினை உரிய ஏலநிபந்தனைகளுடன் பொது ஏலம் விட்டு நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1079/2024/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.900 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.